ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1916/9 - 2015 මැයි මස 27 වැනි බදාදා - 2015.05.27

*1916/9 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

வீடு அபிவிருத்தி நிதியம் நிறுவுதல் தொடர்பான நியதிச் சட்டம்

*1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் வீடு அபிவிருத்தி நிதியம் நிறுவுதல் தொடர்பான நியதிச் சட்டத்தின் 7 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் மின் சக்தியும் எரிசக்தியும், மாகாண வீதி, வீடமைப்பும் நிர்மாணமும், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, சமூக நலன்புரியும் நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு தொடர்பான அமைச்சர் மூலம் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் காட்டப்படும் இந்த ஒழுங்குவிதிகள் 2015.06.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்.*

எச். எம். உபாலி கொடிக்கார,
மின் சக்தியும் எரிசக்தியும், மாகாண வீதி, வீடமைப்பும்
நிர்மாணமும், நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு, சமூக
நலன்புரியும் நகர மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு தொடர்பான
அமைச்சரும்,
மேல் மாகாணம்.

பத்தரமுல்லை,
*2015, மே 26.*

***1990 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் வீடு அபிவிருத்தி நிதியம் நிறுவும் நியதிச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.***

1. *2008 ஆம் ஆண்டின் மே மாதம் 30 ஆந் திகதிய 1552 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதித் தொகுதியில் 5 “அ” (1) உப பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழ் வருமாறு திருத்தம் செய்தல்.*

5 “அ” (1) புதிதாக வீடொன்றைக் கட்டுதல்.

இதன் தொடர்பாக உதவி பெறுநருக்கு செலுத்தும் உச்ச உதவி நிதி 100,000 ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்படும். நிதி செலுத்தும் தவணை எண்ணிக்கை 2 ஆகும்.

(i) வேலையை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகும் போது, - 60,000 ரூபா.

(ii) வீட்டின் மிகுதிப்பகுதியைப் பூரணப்படுத்துவதற்கு - 40,000 ரூபா.

2. 2004 ஆம் ஆண்டின் யூன் மாதம் 17 ஆந் திகதிய 1345 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதித் தொகுதியில் 5 "அ" (1) உப பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழ் வருமாறு திருத்தம் செய்தல் 5 "அ" (2) இருக்கின்ற வீட்டை மேலும் முன்னேற்றம் செய்தல் மற்றும் ஒரு பகுதியை பூர்த்தி செய்து இருக்கும் வீட்டை பூர்த்தி செய்தல் இது தொடர்பாக ஒரு உதவி பெறுநருக்கு வழங்கும் உச்ச நிதி 50,000 ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்படும். நிதி கீழ்வருமாறு இரண்டு தவணைகளில் செலுத்தப்படும்.

(i) வேலையை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகும் போது, - 30,000 ரூபா.

(ii) குறிப்பிட்ட வேலைப்பகுதி அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டபோது, - 20,000 ரூபா.

3. 2004 ஆம் ஆண்டின் யூன் மாதம் 16 ஆந் திகதிய 1345/16 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதித் தொகுதியில் 5 "அ" (5) உப பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழ் வருமாறு திருத்தம் செய்தல்.

5 "அ" (5) கூரையை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக நிதி உதவி பெற்றுக்கொடுத்தல்.

இது தொடர்பாக ஒரு உதவி பெறுநருக்கு செலுத்தும் உச்ச உதவி நிதி 30,000 ரூபாவுக்கு மட்டுப்படுத்தப்படும்.

(i) வேலையை ஆரம்பிப்பதற்கு ஆயத்தமாகும் போது, - 20,000 ரூபா.

(ii) குறிப்பிட்ட வேலைப்பகுதி அரைவாசி பூர்த்தி செய்யப்பட்டபோது, - 10,000 ரூபா.

4. 2004 ஆம் ஆண்டின் யூன் மாதம் 16 ஆந் திகதிய 1345/16 ஆம் இலக்க, அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதித் தொகுதி 3 இல் V (அ) உப பிரிவை நீக்கி அதற்குப் பதிலாக கீழ் வருமாறு திருத்தம் செய்தல்.

(அ) உதவி பெறுநர் மாதத்திற்கு 8,000 ரூபாவுக்கு மேற்படாத வருமானம் பெறுநராக இருக்க வேண்டும்.

6- 291

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.